லக்ஷ்மன் கைது; லலித் குழுவிற்கு எச்சரிக்கை

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 19 இதழ்: 295
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 05 12 1991

(கொழும்பு)

முன்னாள் ராஜாங்க அமைச்சரும் ஐ.தே.க. தேசிய அமைப்பாளருமாகிய எச். பி. புலனான லக்ஷ்மன் சேனிரத்ன நேற்று பிற்பகல் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

1988 - ம் ஆண்டு இவர் கொலை முயற்சி செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் குற்ற புலனாய்வு பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

இன்று காலை நீதிமன்றில்

(4ம் பக்கம் பார்க்க)

கொழும்பு நகரில் நேற்று பதற்றம்

(கொழும்பு)

திரு. லக்ஷ்மன் சேனிரத்ன கைது செய்யப்பட்டதையடுத்து நேற்று மாலை கொழும்பின் சில பகுதிகளில் பதற்றம் நிலவியதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி கேள்விப்பட்டதும் பெருமளவு குதூர

(4-ம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி முன் இயங்கிய மணிக்கூடு

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் கடந்த முப்பது வருடமாக இயங்காத மணிக்கூடு கோபுர மணிக்கூடு ஜனாதிபதி

(4-ம் பக்கம் பார்க்க)

★ ஜனாதிபதி நல்லாசி

தொண்டமானின் முயற்சிக்கு முன்னுரிமைவழங்க அரசுமுடிவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்னை தீர்வு தொடர்பாக அமைச்சர் தொண்டமான் விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிக்கு முன்னுரிமை வழங்க அரசு முடிவு செய்துள்ளதாம். ஏனைய முயற்சிகள் தற்போது இரண்டாமிடத்துக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் இராணுவதீர்வுக்கும், கூனைத்தடைமாநாடு, மற்றும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் முடிவுக்கும் அரசு முன்னுரிமையளித்துவந்தது. தற்போது அந்த நிலைப்பாட்டில் மாறுதல் ஏற்படுட்டுள்ளதாம்.

அமைச்சர் தொண்டமானின் முயற்சிக்கு அரசின் நேரடி அங்கீகாரம் கிடைக்காவிடினும் ஜனாதிபதியின் நல்லாசி கிடைத்துள்ளது மேலும் திரு. தொண்டமானின் முடிவைப் பொறுத்தே பொதுத் தேர்தலை நடாத்தவும் ஜனாதிபதி முடிவு செய்துள்ளாராம்.

அமைச்சரின் முயற்சியில் நடவடிக்கை ஏற்படும் பட்சத்தில் பொதுத்தேர்தலும் பிற்தள்ளப்படுமென்றும் இதன்மூலம் ஜனாதிபதிக்கு அதிருப்தியாளர்கள் மூலம் நெருக்கடி ஏற்படாமலுமென்றும் அவதானிக்கக்கூடியதாகத் தெரிவித்துள்ளனர். (சி)

யுத்த சூழ்நிலை விரைவில் முடியும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் யுத்தம் எதிர்பார்த்ததைவிட விரைவில் முடிவடைந்துவிடுமென கட்டுப்படைத்தளபதி ஹமிட் வனவிமான தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவடைவதை அதிகாரிகள் எதிர்பார்க்காது. அமைதி நிலை திரும்பிவிடும். புலிகள் ஆயுதங்களை கைவிட்டால் யுத்தநிலை இன்னமும் விரைவில் முடிந்துவிடுமென்றும் அவர் கூறியுள்ளார். (சி)

மன்னாரில் ஊரடங்கு

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் மன்னார் தீவு தவிர்ந்த ஏனைய இடங்களில் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (வீ)

மன்னாரில் உக்கிர மோதல் படையினருக்கு பலத்த சேதம்

(மன்னார்)

மன்னாரில் நேற்று முன் தினம் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்குமிடையில் நடந்த நேரம் இடம் பெற்ற உக்கிர மோதலில் படையினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இரு

புலிகள் வீரமரணமடைந்துள்ளனர். கடும் விமானதாக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

புதியஎம். பி.க்கள் நியமனம்

(கொழும்பு)

ஐ. தே. கட்சியிலிருந்து நீக்கப்பட்ட எட்டு உறுப்பினர்களுக்கு பதிலாக முன் விருப்புரிமை வாக்கு பட்டியலில் அடுத்த இடத்திலிருந்த 8 பேர் இந்த மாதம் 12ந் திகதி நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்களாக என்று ஐ.தே.க. பொதுச் செயலாளர் ரணிசேன கரே தெரிவித்தார். (மா)

தொண்டா பணிக்கு எதிராக விஷமத்தனமான பிரசாரம்

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமான் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகளுடன் பேசுவதை விரும்பாத சில சக்திகள் விஷமத்தனமான பிரசாரத்திலும் இறங்கியுள்ளன.

அமைச்சர் ஹமீத் புலிகளுடன் ஒரு வருடம்பேச்சு நடத்திய பின்பு, புலிகள் குவிப்களை வைத்துக்கொண்டதாகவும், திரு தொண்டமானும் புலிகளுடன் பேச்சு நடத்திய

(4-ம் பக்கம் பார்க்க)

21ந் திகதி 'சார்க்' மாநாடு

(கொழும்பு)

'சார்க்' உச்சி மாநாடு இம் மாதம் 21ந் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

21-ம் திகதி நடைபெறும் ஒருநாள் 'சார்க்' மாநாட்டில் சார்க் நாடுகளின் அனைத்துத் தலைவர்களும் கலந்துகொள்ளவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தமிழர் இருவர் எம். பி. யாகும் வாய்ப்பு

(கொழும்பு)

உயர்நீதிமன்ற தீர்ப்பையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவி இழந்த இரு உறுப்பினர் இடங்களுக்கும் இரு இ. தொ. கா. கட்சி தமிழர் வர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தேர்தலின் போது வெற்றி பெற்றவருக்கு அடுத்த இடத்தை பெற்றோரே தேர்தல் மாவட்ட பட்டியலிருந்து தெரிவாகும் அந்தஸ்தை பெறும் தகுதி உண்டு.

இந்த வகையில் நுவரெலியா மாவட்ட எம். பி. காமினி செனரத்னாவும், பதுளை மாவட்ட எம். பி. சுரவீரன்னி, லக்ஸ்மன் சுரவீரவும்

(4-ம் பக்கம் பார்க்க)

இராணுவ உயர் அதிகாரி தடுப்புக் காவலில்

(கொழும்பு)

இலங்கை இராணுவ உயரதிகாரி ஒருவர் மனோ ... இராணுவ முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜே. வி. பி. இயக்கத்துடன் இவருக்கு தொடர்புகள் இருந்ததையடுத்து இவர் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இராணுவத் தலைமைகளின் அமைவிடங்கள், இராணுவ தளவாடங்களின் எண்ணிக்கை போன்ற தகவல்களை ஜே. வி.

(4ம் பக்கம் பார்க்க)

ம. எண்ணெயில் மோசடி லைசென்ஸ் ரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவருவதற்கென அநுராதபுரத்தில் மண்ணெண்ணை கொள்வனவு செய்து, இடைவெளியில் கூடிய விலைக்கு விற்பனவு செய்த, தனியார் வர்த்தகர்களின் 'லைசென்சுகள்' ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

வி. பி. சிங் - புலிகள் தொடர்பென சந்தேகம்

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு தி. மு. கழகம் உதவி செய்ததாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பாக முன்னாள் இந்தி

(4ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

ஜீவாகாரம்

குழந்தைகள் தேவையான ஊட்டத்தை (போஷாக்கை) பெற்றுக்கொள்ள நாளாவது வாரத்திலிருந்தே அண்ணாநாரிப்பான ஜீவாகாரத்தை வாங்கிப் பாவியுங்கள். கிடைக்கும் இடம்: அண்ணா கோப்பிக் கடை, யாழ்ப்பாணம்.

(எ-1747)

பழைய புத்தகங்கள்

உங்களிடமுள்ள புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவை நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படும். யாழ் பழைய புத்தகங்கடை, 82, ஆறுமுகநாவலர் (ராஜா) வீதி.

(சி-5630)

சைவசித்தாந்தப் பயிற்சி

மெய்கண்டதேவர் சைவசித்தாந்த உயர் நிறுவனத்தால் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் இலவசமாக வாரந்தோறும் ஞாயிறு காலையில் சைவ சித்தாந்த ஞானப் பயிற்சி நடைபெறுகின்றது.

(சி-5667)

"நீம் தூபம்"

படைபெடுத்து வரும் நுளம்புக் கூட்டத்தை விரட்டி விடுகிறது நீம் தூபம். நித்தமும் நீம் தூபம் புகைத்து நிம்மதி காணுமாறு. அண்ணாகோப்பக் கடைகளிலும் கிடைக்கிறது. விக்கிறவர்.

(எ-1750)

விற்பனைக்கு

மரகியப்பிட்டி சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். வே. இன்னாசிதாசை மரகியப்பிட்டி.

(சி-5665)

ஆனந்தா கலண்டர்

ஆனந்தா பஞ்சாங்க கலண்டர் 1992 வெளிவந்துவிட்டது. பஞ்சாங்கக் குறிப்புகளாவும் நேரங்களுடன் மற்றும் பொது விடுமுறைகள், விசேட நாட்கள் முதலிய எல்லா விபரங்களும் அடங்கிய மாதக் கலண்டர் விலை ரூ. 86-00. விற்பனையாளருக்கு கழிவு உண்டு. தொலைபேசி மூலம் பெறுவதற்கு: ஆனந்தா புத்தகசாலை; பூபாலசிங்கம் புத்தகசாலை; சோபிதா புத்தகசாலை யாழ்ப்பாணம். தர்க்கா ஸ்ரேஷனேரிஸ், சுன்னாகம்.

(சி-5661)

இயக்கச்சி-கொம்படி வீதி திருத்த வேலை ஆரம்பம்

(ஒப்சேவர்)

இயக்கச்சியிலிருந்து கொம்படியூடாகவும் தரம் வீதி திருத்த வேலை ஆரம்பமாகியுள்ளது.

நீண்டநாட்களாக பராமரிக்கப்படாமலிருந்த வீதியைத் திருத்துவதற்கு நிதியொதுக்கீடு மதிப்பிடப்பட்டுவருகிறது.

(144)

தொலைக்காட்சியில் நாடாளுமன்றக் கூட்டத்தொடர்

(புதுவிலி)

இந்திய நாடாளுமன்ற கூட்டத்தொடர் நேற்று முதன்முதலாக தொலைக்காட்சியில் காட்டப்பட்டது.

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் அழைத்து ஆலோசனை நடத்திய பின்னே தொலைக்காட்சி ஒடுமாறு செய்யப்பட்டது.

இந்தியாவிலுள்ள வெளிநாட்டவர் மீது எயிட்ஸ் பரிசோதனை

(புதுடில்லி)

ஒரு வருடத்துக்கு மேல் இந்தியாவில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள் மீது "எயிட்ஸ்" பரிசோதனை தொடர்ந்தும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தியாவில் 4 ஆயிரம் பேர் 'எயிட்ஸ்' நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாயிரம் ஆண்டளவில் இத்தொகை 1 லட்சத்தை எட்டிவிடும் என அஞ்சப்படுகிறது.

இதேவேளை எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் பெயர் விபரம் வெளியிடப்படவேண்டுமென, இந்திய நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டிருந்த சட்டம் நடைமுறையிலிருந்து வாபஸ் பெறப்பட்டது.

இச்சட்டம் கொண்டுவரப்பட்டால் நோயாளிகள் டாக்டரிடம் செல்ல அஞ்சுவர் என காதார அமைச்சர் தெரிவித்த கருத்தினை அடுத்தே இச்சட்டம் வாபஸ் பெறப்பட்டது.

நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் ரோட், கோண்டாவில்

A/L 92

சென்மதி நிலுவை:

உதயன்

கம்பனி:

ஸ்ரீ

மாணவர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது,

ஆரம்பம்: 09-12-1991

— நிர்வாகி

(எ 1752)

5-ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கதிரவேலு சுப்பிரமணியம்

(ஸ்தாபகர் - இராசம் ஹோட்டல் ஸ்ரோர்ஸ்)

தோற்றம்: 15-01-1927 மறைவு: 01-12 1986

திதி: 05 12 1991

எங்களுக்கெல்லாம் வழி காட்டியாக இருந்து அன்பு செலுத்திய உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள், சகோதரங்கள், மருமக்கள்.

12, கந்தபுராண வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(சி 5662)

'காத்தவராயன்' நாடகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியல் கழகம் வழங்கும் 'காத்தவராயன் நாடகம்' யாழ். மல்லிகைவனை சபா மண்டபத்தில் 7-ம் திகதி சனிக்கிழமை பி.ப 2-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கலாநிதி இ. பாலசுந்தரத்தின் தயாரிப்பு நெறியாள்கையில் உருவான 'காத்தவராயன்' நாடகம் ரூபவாஹினி தொடரான ஒளிபரப்பப்பட்டதுடன் ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதலை பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மாபெரும் இசைமாலை நிகழ்ச்சி

இடம்: சாவகச்சேரி இந்துக்கல்லூரி

காலம்: 07-12-1991 சனிக்கிழமை

மாலை 6-00 மணி.

நிகழ்ச்சிகள்

இந்தமண் எங்களின் சொந்தமண் புகழ்

"சாந்தன் இசைக்குழுவினரின்"

★ இன்னிசை நிகழ்ச்சி ★

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் வழங்கும்

★ களத்தில் காத்தான் ★

பிரவேசம் :- 100/-, 10/-,

மாணவர்களுக்கு: 5/-

22-6-1991 ல் நடாத்துவதற்காக விற்பனை செய்யப்பட்ட ரிக்கற்றுகளும் செல்லுபடியாகும்.

(எ-1753)

1-ம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வன்	திருமதி
ந. சந்திரமோகன்	ந. நாகரத்தினம்
மலர்வு: 1962-04-12	மலர்வு: 1922 06 06
உதிர்வு: 1990-12-04	உதிர்வு: 1990-11-04
திதி: 1991-12-05	திதி: 1991-10-23

அன்புடன் எம்மை வளர்த்த தெய்வமே!
பாசமுடன் உங்கள் மடியில் தவழ்ந்தோம்
விவேகமுடன் வளர்த்த பஞ்சவர்ணவிக்
பிரியமுடன் ஒரு மனை கூடி வாழ்வே
காதிவமதினிலே அழைத்தது தான் ஏனோ? பெரியம்மா!
பாசம் என்ற வீடுகட்டி - நாம்
அன்பாய் வளர்த்த சந்திரச்செடி
பூத்து நன்னா காய்த்திடும் அழகைக்காண
காத்திருந்த எம்மை விட்டு காதறென
கரைந்ததேன் சந்திரா!
பாண்டவரில் சகாதேவனே - உன்
சந்திரவதனத்தைக் காணாது; கரிதவித்து நிற்கிறோம்
வழிகாட்டி இன்றி நாம் வாழத்தவிக்கின்றோம்
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு எங்கு சென்றாய் நீ
எம்மகர் துயர் என்றென்றும் மாறாது செல்வா!
ஓராண்டு சென்றாலும் எமது கண்ணீரும் பூக்கள்
ஓயாது—அஞ்சலி செய்யும் உன் கலைப்
பாதங்களுக்கு. உங்கள் இருவரின் ஆத்ம சாந்திக்கு
வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கும்:-

பெற்றோர், சகோதரர்கள், சகோதரி,
அண்ணிமார், பெருமக்கள், உறவினர்.

கிறைஸர்,
வட்டு- கிழக்கு,
கிந்தன்சேனை.

(சி 5668)

கருணாநிதி கைது என்ற வதந்தியால் தமிழ்நாட்டில் பலபகுதிகளில் வன்செயல்கள் இடம்பெற்றன

(சென்னை)

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்ற வதந்தியால் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வன்செயல்கள் இடம்பெற்றன.

தமிழக முதலமைச்சர் உத்துறை செயலர் திரு. நாகராஜன், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வளர்ச்சிக்கு திரு. மு. கருணாநிதியே காரணம் என கொடுத்தவாக்குமூலம் 'தூரதர்ஷன்' தொலைக்காட்சியில் ஒளிபரப்பானதை அடுத்து, திரு. மு. கருணாநிதி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்ற வதந்தி காட்டுத்தீயாக பரவியது.

இதனையடுத்து சென்னை நியாகராஜநகர், கோடம்பாக்கம், அம்பத்தூர், நுங்கம்பாக்கம், தேனாம்பேட்டை ஆகிய இடங்களில் புஸ்களுக்கு தீக்கிரை விளைவிக்கப்பட்டன. பலபஸ்கள் ஓடவிடாமல் இடைநிறுத்தப்பட்டன. சாலை மறியல்களும் திடீரென்று மூட்டப்பட்டன. அச்செய்தி வதந்தியே என அறியும்வரை தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் பதற்றம் நிலவியது.

கருத்துக் கணிப்பின் பின்னர் உக்கிரேன் சுதந்திரத்தை ரஷ்யா அங்கீகரித்தது

(மொஸ்கோ)

சோவியத் யூனியனிலிருந்து உக்கிரேன் குடியரசு பிரிந்து செல்வதற்கு ஆதரவாக கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கருத்துக் கணிப்பில் அந்தக் குடியரசின் மக்கள் அமோக ஆதரவை அளித்ததை அடுத்து உக்கிரேனின் சுதந்திரத்தை ரஷ்யா அங்கீகரித்துள்ளது.

உக்கிரேனில் நடைபெற்ற நேரடி அதிபர் தேர்தலில் திரு. விலோனிக் கிரச்சுக் வெற்றி பெற்றதை அடுத்து சோவியத் அதிபர் திரு. மிகாயில் கோர்பச்சேவுக்கு வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளார்.

காவிரி நீர் விநியோகம்: மத்திய அரசுக்கு பெரும் பிரச்சனை

(புதுடில்லி)

காவிரி நதி நீர்ப்பங்கீடு பிரச்சனையால் மத்திய அரசு இருதலைக் கொள்ளிஎறும்பு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

காவிரி நீரில் 20 ஆயிரத்து 100 கோடி கன அடி தண்ணீரை தமிழ்நாட்டுக்கு கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும் என நடுவர் மன்றம் இடைக்கால ஆணை பிறப்பித்திருந்தது.

நேற்றுமுன்தினம் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தலைமையில் தமிழ்நாடு அனைத்துக் கட்சிகுழுவொன்று பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவை சந்தித்து நடுவர்மன்ற தீர்ப்பை செயற்படுத்தி அறிவிக்குமாறு வற்புறுத்தியது.

அதற்கு கர்நாடக அரசு கடந்த இடைக்கால அறிவிப்பை செயற்படுத்த அறிவிக்க வேண்டுமென அறிவித்ததோடு, முதலமைச்சர் திரு. வீரப்பா தலைமையில் அனைத்துக்கட்சி குழுவொன்று டில்லி செல்லவுள்ளது.

கர்நாடக மாநில அரசு காங்கிரஸ் கட்சியை பெரும்பான்மையாகக் கொண்டது. தமிழ்நாடு அரசு காங்கிரஸ்-அ. தி. மு. க. கூட்டு அரசாகும்.

இந்த இரண்டு மாநிலங்களையும் திருப்திப்படுத்தும் வகையில் காவிரி நீரை எவ்வாறு பகிர்வது என்பது மத்திய அரசுக்கு பெரும் பிரச்சனையாக உள்ளது

ஐ. நா. சபை புதிய செயலர் பதவியேற்பு

(நியூயோர்க்)

எகிப்திய பிரதிப் பிரதம மந்திரி பூத்ரோஸ் கலி ஐ. நா. சபையின் செயலாளர் நாயகமாக நேற்றுமுன்தினம் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

சர்வதேச சமாதானம், பாதுகாப்பு, அபிவிருத்தி, ஜனநாயகம் என்னவற்றிற்காகத் தாம் பாடுபடப்போவதாக அவர் தெரிவித்தார்.

அதற்கு முன்னதாக ஐ. நா. செயலர் பெரெஸ் டி கொயிலரின் பதவிக் காலம் இந்தவாரத்தோடு முடிவடைகிறது.

புதிய ஐ. நா. செயலரின் பதவிக் காலம் ஜனவரி 1-ம் திகதியிலிருந்து 5 வருட காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வரும் இந்திய ரயில்வே குழு

(கொழும்பு)

இந்திய ரயில்வே நிர்வாகம் கம்பனியைச்சேர்ந்த குழு கொழும்பு இலங்கை வரவுள்ளது.

இந்திய குழு இலங்கையில் 5 நாட்கள் தங்கியிருக்கும் போது கோக்குவாத்து அமைச்சர் கலந்துகொண்ட அமைச்சு அதிகாரிகளையும் சந்திக்கும்.

இலங்கையில் ரயில்வே சேவையை நவீனமயப்படுத்தவும், விஸ்தரிப்பதற்கும் ஒத்துழைப்பு அழிக்கும் சாத்தியம் பற்றி இந்திய குழுவினர் இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.



யாழ். நகரில் தமிழீழ வாவன்துறை பணிகளை திறப்புவிழாவின்போது விடுதலைப்புலிகள் மக்களுடன் ஒன்றாக நாடா வெட்டி திறந்து வைக்கிறார் தலைவர் திரு. வே. பிரபாகரன். அருகில் வாவன்துறை பொறுப்பாளர் திரு. நடேசன் தேசியக் கொடியை ஏற்றிவைப்பதையும், அருகில் வாவன்துறை பொறுப்பாளர் திரு. நடேசன் தேசியக் கொடியை மரியாதைசெலுத்துவதையும் படத்தில் காணலாம்.

இராணுவ நடவடிக்கை இல்லையேல் உல்லாசத்துறையில் கிழக்கு முன்னணி வகித்திருக்கும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் நடைபெற்றிராவிட்டால் கிழக்கு மாகாணக் கரையோரப் பகுதி உல்லாசத்துறையில் மேற்திர முக்கிய நிலையை வகித்திருக்கும் என்று நாடாளுமன்றத்தில் ஜனாப் அத்தாஉல்லா மஜீத் கூறினார்.

உல்லாசப் பயணத்துறை சம்பந்தமான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

க. பொ. த. (சா) பரீட்சை நிலையங்கள் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

1991-ம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சைக்கு தோற்ற அறிவிக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களில் யாழ். கல்வி திணைக்களம் மாற்றம் செய்துள்ளது. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பரீட்சை நிலையங்களுக்கு அதற்காக மாற்றம் செய்யப்பட்டுள்ள புதிய பரீட்சை நிலையங்களினதும் விபரங்கள் வருமாறு:

அறிவிக்கப்பட்ட பரீட்சை நிலையம்		மாற்றத்துக்குள்ள புதிய பரீட்சை நிலையம்
பண்டத்தரிப்பு கோட்டம்		
பண்டத்தரிப்பு மகளிர்	3	மாதகல் சென்ற ஜோசப்
இளவாலை கன்னியர் மடம்	2	இளவாலை சென்ற ஹென்றீஸ்
வட்டு. இந்து.	3	சுன்னாகம் சைவப்பிரகாச வி. I
வட்டு. இந்து	4	சிறுப்பிட்டி சிவசக்தி வி.
கிளிநொச்சி	3	மூளாய் சைவப்பிரகாச வித். I
கிளிநொச்சி	4	மூளாய் சைவப்பிரகாச வித். 2
மருதனார்மடம் கோட்டம்		
ஏழாலை ம. வி.		சுன்னாகம் மயிலணி ம. வி.
இராமநாதன் கல்லூரி	1	இணுவில் ஆ. மி. த. பா. 1
இராமநாதன் கல்லூரி	2	இணுவில் சைவமகா ம. வி.
ஸ்கந்தவரோதயா	4	கந்தரோடை த. க. ம. வி. 1
இடைக்காடு ம. வி. 1	1	அச்சுவேலி சென்ற தி ம. வி. 8
மானிப்பாய் இந்து	3	சண்டிலிப்பாய் இந்து ம. வி.
மானிப்பாய் மகளிர்	3	சுதுமலை சிவானந்த பாரதி ம. வி.
யாழ்ப்பாணம் கோட்டம்		
வேம்படி மகளிர்	3	யாழ். மத்தியகல்லூரி ஆ. பி.
திருநெல்வேலி கிறீ. மட.	3	நாவலர்மரக்கடு மகா வி. ம. வி.
கனகரத்தினம் ம. ம.	3	கல்விளைவடு இ. த. க. பா.
பெரியபுலம் ம. வி.	1	கொக்குவில் இந்து ஆ. பி.
வடமராட்சி		
உடுப்பிட்டி மகளிர்	2	வல்வெட்டி இ. த. பா. 1
வல்லை மகளிர் கல்லூரி	2	சிறுப்பிட்டி 2
நெல்லியடி ம. ம. வி.	2	நெல்லியடி ம. ம. வி. க. பி. I
நெல்லியடி ம. ம. வி.	3	தேவரையாளி இந்து.
ஞானசாரியர்	2	வதிரி திரு. இருதய. I
கேவாயுதம் ம. வி.	2	தும்பளை சைவப் பிரகாச வித். I
சாவகச்சேரி கோட்டம்		
சாவகச்சேரி றிபேக்	2	சந்திரபுர ஸ்கந்தவரோதய I
சாவகச்சேரி றிபேக்	3	சந்திரபுர ஸ்கந்த ம. வி. 2
தீவகக் கோட்டம்		
சேர். வைத்தி. துரைசாமி	1	கொட்டடி நமசிவாய வித். 1
,,	2	கொட்டடி நமசிவாய வித். 2
,,	3	நல்லூர் சரஸ்வதி மகாசாலை
,,	4	சென். ஜோன்ஸ் அக்கடமி
வேலணை சைவப்பிர. வித்.	1	கொக்குவில் நாவலர் வித். I
மண்டைதீவு ம. வி.		நல்லூர் விக்கினேஸ்வரா 1
புங்குடுதீவு ம. வி. I		கொக்குவில் தொ. நு. கல். I
புங்குடுதீவு ம. வி. II		கொக்குவில் தொ. நு. கல். II

(152)

சாவகச்சேரி நகராட்சி மன்றம்

1992-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

மேற்படி விடயம் சம்பந்தமாக 18-11-91 ம் திகதி விளம்பரம் தொடர்பானது.

01-01-1992 தொடக்கம் 31-12-1992 வரையிலான காலப்பகுதிக்குள் கீழ்க் குறிப்பிடப்படும் விபரங்கள், சேவைகளுக்கான கேள்விகள் 11-12-1991 ம் திகதி பிற்பகல் 4.00 மணிவரை என்னும் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும் 09-12-1991 ம் திகதி பகல் 12.30 மணிவரை கேள்விப்படிவங்கள் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

1. சாவகச்சேரி நகரசபை பொதுச்சந்தை
2. சாவகச்சேரி நகரசபை மீன்சந்தை
3. ஆட்டிறைச்சிக்கடை என் எம் எஸ் 1
4. ஆட்டிறைச்சிக்கடை என் எம் எஸ் 2
5. மாட்டிறைச்சிக்கடை என் எம் எஸ் 3
6. பன்றிறைச்சிக்கடை என் எம் எஸ் 4
7. காலைக் குத்தகை
8. குப்பை கூளங்கள் அகற்றல்

த. நவரத்தினராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
29-11-1991. (எ 1749)

இராசி பலன்

05-12-1991
வியாழக்கிழமை
(தமிழுக்கு கார்த்திகை 19)

சதுர்த்தி மு.ப. 8-41 வரை.
அனுஷம் பி இ. 4-03 வரை.
இரவு ராகம் பகல் 1-46 முதல் 3-16 வரை.
சுபநேரம் காலை 7-46 முதல் 9-16 வரை.
சித்தயோகம்.
அமாவாசைவிரதம்.

மேடம்: தொழில் முயற்சி, காரிய அனுகூலம், பணமுடை.
இடபம்: தொழிலாளர், பணவிரயம், மாற்றம்.
மிதுனம்: பெண் உதவி, தொழில் சிறப்பு, அதிகாரி வரவு.
கடகம்: மனக்கலக்கம், வாயுத்தொல்லை, பகை.
சிங்கம்: வெற்றிமேல் வெற்றி, பயணக்கஷ்டம், குடும்பச்சுமை.
கன்னி: விருந்தினர் வருகை, தொழில்வெற்றி, மகிழ்ச்சி.
துலாம்: கவனமாகப் பேசுதல், உடல் உபாதை, பதட்டம்.
விருச்சிகம்: இசைவான மகிழ்ச்சி, காரிய சிறப்பு, மகிழ்ச்சி.
தனுசு: [illegible], நற்செயல்மை, அசதி.
மகரம்: மாமனார்வருகை, காரிய அனுகூலம், புகழ்.
கும்பம்: [illegible], தொழில் வளர்ச்சி, வாக்கு வன்மை.
மீனம்: அதிக செலவு, பணமுடக்கம், மனச்சலனம்.

ஜோஸ்யர்

அநுராவைவிட எனக்கு கூடுதலாக தெரியும் - சிறிமா

(கொழும்பு)

" அநுராவைவிட எனக்கு சட்ட திட்டங்கள் எல்லாம் எனக்கு கூடுதலாக தெரியும் அவர் சந்திரிகாவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்த்துவிட்டு, யாரும் ஆலட்டிக் கொள்ளத் தேவையில்லை"

இவ்வாறு சிறிமாவோ பண்டாரநாயக்கா, அநுராவை சாடியுள்ளார்.

சந்திரிகா விஜயகுமாரணதுங்காவையும், வெகுஜனசுதந்திர முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர்களையும் சுதந்திரக் கட்சியுடன் சேர்த்துக்கொண்டது கட்சி சட்ட திட்டங்களுக்கு விரோதமானது என திரு. அநுரா தெரிவித்திருக்கும் கருத்துக்கு பதிலளிக்கையிலேயே திருமதி சிறிமா மேற்கண்டவாறு கூறினார்.

வி. பி. சிங்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னாப் பிரதமர் திரு. வி. பி. சிங் உடந்தையாக இருந்தாரா என்பது குறித்து விளக்கம் அளிக்குமாறு இந்திரா காங்கிரஸ் கட்சி நேற்று முன்தினம் கேட்டுள்ளது.

ராஜிவ்காந்தி படுகொலைக்குப் பின்னர் காங்கிரஸ்கட்சி திரு. வி. பி. சிங்கிடம் விளக்கம் கோருவது இதுவே முதல் முறை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

தமிழர் இருவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செனவிரத்ன ஆகியோரும் தமது உறுப்பினர் பதவியை இழக்க விரும்புதாக, இவர்களின் வெற்றிடங்களுக்கு இத்தேர்தல் மாவட்டங்களில் ஐ. தே. க. வேட்பாளர் பட்டியலிலிருந்து அடுத்த ஸ்தானத்தில் இருப்பவர் தெரிவாகவுள்ளார்.

இதனால் நாராலை வி. விருந்து எம். சிவலிங்கமும், பதுளையிலிருந்து டி. வி. சென்னனும் தெரிவாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதே அடிப்படையில் கொழும்பு மாவட்ட உறுப்பினர் திரு. அத்துலத் முதலியின் இடத்திற்கு திரு. ஹட்சன் சமரசிங்க புதிய உறுப்பினராக தெரிவாகலாம்.

இராணுவ உயர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பி. இயக்கத் தலைவர்களுக்கு இந்த உயர் இராணுவ அதிகாரி வழங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஜே. வி. பி. யின் தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்காவை கடல்வழியாக நாட்டைவிட்டு தப்பி ஓடவும், அவருடைய குடும்பத்தவர்களை விமானமூலம் நாட்டைவிட்டு வெளியேற உதவி செய்ததாகவும் இந்த இராணுவ உயரதிகாரி மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (153)

ம. எண்ணெயில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதாகத் தெரிவித்துள்ளது. யாழ். செயலகத்தில் மண்ணெண்ணை கொள்வனவு செய்வதற்காக யாழ் அரச அதிபரின் விசேட அனுமதியைப் பெற்றுச்செல்லும் பல தனியார் வர்த்தகர்கள், அநுராதபுரத்தில் கொள்வனவு செய்யும் மண்ணெண்ணெய் ஒன்றை, இளிநொச்சிப்பகுதிகளில் கள்ளச்சந்தையில் விற்பனை செய்துள்ளது தற்போதுகண்டுபிடிக்கப்பட்டதெனவும், மேற்படி வர்த்தகர்களின் கூசென்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக, யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (வி)

அனுமதி அட்டையில் குழப்ப நிலை

(சமூகசேவைத்துறை)

க. பொ. த. (சாதாரண) 90-ம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கும் 91-ம் ஆண்டு என்றே குறிப்பிடப்பட்ட அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதால் மாணவர்களிடையே குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

டிசம்பர் 9-ம் திகதி ஆரம்பமாகவுள்ள க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் போது 90-ம் ஆண்டு மாணவர்களுக்கு விசேட பரீட்சை நடத்தப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது 90-ம் ஆண்டு மாணவர்களுக்கும் 91-ம் ஆண்டு க. பொ. த. (சாதாரண) பரீட்சை என்று குறிப்பிடப்பட்ட அனுமதி அட்டைகளே வழங்கப்படுகின்றன. 90-ம் ஆண்டு விசேட பரீட்சை என எதுவும் குறிப்பிடப்படவில்லை. (86)

தீவுப் பகுதியிலும் க. பொ. த. பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டில் கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதாரண) பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு, விஞ்ஞான, விடை எழுதுதாள்கள் அரசாங்கத்தால் நேரடியாக அங்கேயே அனுப்பப்படுமெனத் தெரிவருகிறது.

அதிர்ஷ்டசாலி சிறுவர்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளையில் சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவர்களில் ஐவரை, தெற்காசிய நாடுகளின் சமாதானம் கொழும்பில் நடாத்தும் விளையாட்டுப் போட்டிகளைக் கண்டுகளிப்பதற்கான நுழைவுச் சீட்டுகளைப் பெறும் அதிர்ஷ்டசாலிகளாக இலங்கை வங்கி தெரிவு செய்துள்ளது.

அதிர்ஷ்டசாலிகளான சிறுவர் சேமிப்புக் கணக்கு இலக்கங்கள் வருமாறு:

1785, 1253, 1904, 2250* 2369.

நயினை பெண்கள் யாழ். வந்தனர்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவிலிருந்து எதுவித சிகிச்சை வசதியற்ற நிலையில் இரு கர்ப்பிணிப் பெண்களை படகுமூலம் யாழ்ப்பாணத்துக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்துள்ளனர்.

திருமதி மஞ்சுளா செல்வநாதன் (30 வயது), ஆறுமுகம், நயினாதீவு.

திருமதி இராசலக்குமி சுந்தரலிங்கம் (37 வயது) ஐந்தாம் வட்டாரம், நயினாதீவு ஆகியோரே வந்தவர்களாவர்.

இவர்கள் முதலாம் திகதி புறப்பட்டு நேற்று நண்பகல் காங்கேசன்துறையிலிருந்து கப்பல் மூலமாக சுன்னாகம் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளால் அழைத்துவரப்பட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (56)

தொண்டா பணிக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பின்பு இந்திய வம்சாவழித் தமிழர்களுடனும் புலிகள் வைத்துக் கொள்ளவேண்டுமென நாடாளுமன்றில் யாழ்ப்பாண மாவட்ட எம். பி. திரு. நவரத்தினம் கடந்த திங்கள் என்று உரையாற்றும் போது கூறியுள்ளார்.

பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவலர் பாடசாலையில் இன்று பிரதேச நடைபெறவிருந்த காரைநகர் பாடசாலைகளிலிருந்து புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான பரிசளிப்பு விழா 6ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாசா முன்னிலையில் 15 நிமிடங்கள் இடம்பெறுகிறது.

ஆண்டையில் ஜனாதிபதி பிரேமதாசா திருகோணமலை விஜயம் செய்து அங்கு மணிக்கூட்டு கோபுரத்தின் முன்பாக உரையாற்றியபோதே இந்த மணிக்கூடு இயங்கியது. தொழில் நுட்பவியலாளர் ஒருவரை இந்த மணிக்கூட்டு கோபுர உச்சிக்கு அனுப்பிய

ஐ. தே. க. வினருக்கு லலித் அழைப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் தமது புதிய கட்சியில் சேருமாறு முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனநாயக தந்திரத்தை விடையும் வரையும் தமது போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததில் கூறியதாவது; புதிதாக தோற்றுவிக்கப்பட்ட ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணி கட்சியில் தற்போது 48 ஆயிரம் பேர் அங்கத்தவர்களாக சேர்ந்திருக்கிறார்கள். சகல கிராமங்களிலும் தங்கள் கட்சிக்கிளைகள் நிறுவப்படவுள்ளது என்றார். (மா)

படையினர் சடலங்கள் புலிகளினால் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பகுதியை புலிகள் கைப்பற்றி கப்பு செய்தபோது இராணுவ சிப்பாய்களின் பல சடலங்களும் நவீன ரக ஆயுதங்களும் கண்டெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளால் கண்டெடுக்கப்பட்ட ஆயுதங்கள் வருமாறு;

சி - 56 ரக தப்பாக்கி 01 அதற்குரிய ரவைக் கூடுகள் 06 7.62 ரக கடுந்தாக்குதல் 228 சி. என் சி. ரகக் குண்டுகள் 02 ஆகியனவாகும்.

மலையகப் பகுதியில் பாதுகாப்பு தீவிரம்

(பதுளை)

தோட்டங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, தோட்டத் தொழிலாளர்களையும் விழிப்புடன் இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளது.

தோட்டப் பகுதிகளுக்கு புதியவர்கள் யாரும் வந்தால் வரவா வரவான பொலிஸ் அதிகாரியுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு தோட்ட நிர்வாகிகளால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

லக்ஷ்மன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விசாரிக்கப்படுவார். இவருக்கு எதிராக என்ன குற்றங்கள் சுமத்தப்பட்டு செய்யப்படும் என்பது தெரிவிக்கவில்லை. பொலிசாரினால் இவர் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருகிறார் என்பதை பொலிஸ் தரப்பினர் உறுதிப்படுத்தினார்கள். இதனைக் குறித்து வேறு தகவல்கள் தரப்பொலிசார் மறுத்து விட்டார்கள்.

நடாளுமன்ற ஸ்தானங்களை இழந்த பிரேமதாசா எதிரான மிரட்டல் நடவடிக்கைகள் தீவிரமடையும் என்று தாங்கள் எதிர்பார்த்தாக லலித் - காமினி கோஷ்டியினர் தெரிவித்துள்ளனர். இந்த வகையில் லலித் குழுவினருக்கு ஒரு எச்சரிக்கையெனவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்னிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் வரதராஜன் மகாவித்தியாலயத்துக்குமிடையில் இன்று சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி பிரதேச 1-30 மணிக்கு யாழ் வரதராஜன் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (வி)

கொழும்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காளர்கள் அரசு வீடுகளுடன் கூடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைவடுத்து லலித்குழுவினர் அவசர சந்திப்பொன்றை நடாத்தியதாகவும் சில முக்கிய முடிவுகளை மேற்கொண்டதாகவும் தெரிய வருகிறது. (வி)

மன்னாரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலும் இடம் பெற்றுள்ளது. சுகாதாரத்துறை முகாமிலிருந்து வெளியேறிய படையினரை புலிகள் அத்தி முறிப்பு என்னுமிடத்தில் வைத்து கடும் எதிர்தாக்குதலை மேற்கொண்டனர். இது மோதல் காலை 8-30 மணியிலிருந்து மாலை 3 30 மணியளவு தொடர்ந்து இடம்பெற்றது. இக்மோதலில் படையினர் தரப்பில் பலத்தசேதம் ஏற்பட்டது. இதைவடுத்து படையினர் முகாம் திரும்பினர்.

இதேவேளை வவ - 8 ரக விமானம் இரண்டும், இரு ஹெலிகளும் கடும் தாக்குதலை மேற்கொண்டன. இக்மோதலில்பெப் மக்களின் (கிளைத் துரை நிலவேலவன், வடிவேலு வீரரணமடைந்தார்.

நேற்று இப்பகுதியில் கடும் விமான தாக்குதல் இடம் பெற்றது. இதில் கப்டன் தாடகன் (பூவரசபிள்ளை ஜெகதீசன்-புதுக்கொலனி செல்வடி) வீரமரணமடைந்தார்.

இக்மோதலில் 6 படையினர் கடுகாயமடைந்தாக மாதுளாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (சி)

வர்கள் ஜனாதிபதி உரை முடியும் வரைக்கும் அவரைக் கொண்டு அதனை இயங்க வைத்தார்கள். (153)

அறிவித்தல்

தொண்டமானாற்று நீரேரியில் படுப்பு வலை (கட்டுவலை) தொழில் செய்வதை வடமராட்சி கூற்றெழிலாளர் ஒன்றியம் கூற்புலிகளின் அனுசரணையுடன் அவ்விடத்தில் நடைபெறும் சிறுதொழில்களாகிய

கூடு, பாச்சுதல், விச்சுவலை, கண்டி கட்டுதல் போன்ற தொழில்களை செய்வதற்கு ஏதுவாக இன்றுமுதல் தடை செய்துள்ளது.

இதை மீறுவோர் கடுமையான தண்டனைக்குள்ளாவார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடமராட்சி கடல் தொழிலாளர் ஒருங்கிணைப்பு ஒன்றியம்,
பருத்தித்துறை.

(சி 5669)

இவைத்திலுள்ள "எநாடு" விலிட்டுக் கிடைக்கப்பெற்ற தகவலாக யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு வீதி 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 05-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number E/18336/91.